மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இந்தச் சுவையான செய்தியைக் கேட்டு வியப்படைகிறேன்.

திரு. ப. மகாதேவன் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். என்னுடைய பெயரைக் குறிப்பிட்டதால் ஒரு விளக்கம் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'தன்நிலை விளக்கம்' என்று சொல்ல வேண்டும். 'பாயின்ட் ஆஃப் ஆர்டர்' அல்ல.

திரு. ப. மகாதேவன் : சட்டமன்றத் தலைவர் அவர்களே, என்னுடைய பெயரில் 'பிள்ளை' என்ற பட்டம் இருக்கக்கூடாது என்று முன்பே எழுதிக் கொடுத்திருக்கிறேன். தற்போது சட்டமன்ற ஏடுகளில் ப. மகாதேவன் என்றுதான் இருக்கிறது.

திரு. கே. பி. எஸ். மணி : On a point of order, இந்தச் சபையில் பறையர், பள்ளர் என்ற ஜாதிப் பாகுபாடு இருக்கக் கூடாது என்ற நிலைமையில் அந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இந்தச் சபையில் அங்கத்தினர்களாக இருக்கக்கூடிய நிலையில் பறையர்கள், பள்ளர்கள் என்ற பதங்களை உபயோகப்படுத்தி இந்தச் சபையில் பேசுவது இந்தச் சபையிலே அங்கத்தினர்களாக இருப்பவர்களைக் கேவலப்படுத்துவதாக ஆகாதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாருடைய கேள்வியில் அந்தச் சொற்கள் பயன்படுத்தப்பட்டன?

ஒரு குரல் : திரு. நாகசுந்தரம் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஜாதியைக் குறிப்பிட்டுப் பேசக்கூடாது என்று சொல்ல முடியாது. கூடியவரையில் அத்தகைய சொற்களைத் தவிர்க்க வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

ஆசிரியர்களுக்கு வீடு

* 64 வினா—திரு. பெ. மலைச்சாமி : திரு. ரா. ரா. முனுசாமி: } மதிப்பிற்குரிய கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தொடக்கப்பள்ளி, கல்லூரி ஆசிரியர்களுக்கு அரசு வீடு கட்டித் தரும் திட்டத்தை வகுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்காக குடியிருப்பு வசதியளிக்க நான்காவது திட்ட வரைவு அனுமதிக்கிறது. ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கோ அல்லது கல்லூரி ஆசிரியர்களுக்கோ குடியிருப்பு வசதி அளிக்க எந்தத் திட்டமுமில்லை.

1967 ஜூன் 24]

திரு. ரா. ரா. முனுசாமி : பஞ்சாயத்து யூனியன் பள்ளியிலும் உயர் துவக்கப்பள்ளியிலும் பணி புரியும் ஆசிரியர்களுக்கு அந்தந்த ஊர்களிலேயே வீடுகள் கட்டித் தரப்படுமா? எப்போது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கும், கல்லூரி ஆசிரியர்களுக்கும் அந்தத் திட்டம் இல்லையென்று சொன்னேன். ஆசிரியைகளுக்கு மட்டும் வீடு கட்டிக் கொடுப்பது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. அதுவும் 750 குடியிருப்பு வீடுகளுக்கு மட்டுந்தான் ஏற்பாடு செய்யப்பட்டது. ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு இரண்டு வீடுகள் வீதம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்டம் போட்டு 500 வீடுகள் நிறைவேறியிருக்கின்றன. இன்னும் 250 வீடுகள் கட்டப்பட்டுவருகின்றன.

திரு. ஆலடி அருணா : தொழில் இயல் கல்லூரியில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு கலைக் கல்லூரி ஆசிரியர்களைப் போன்று யு.ஜி.சி. ஸ்கேல் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தக் கேள்விக்கு தொடர்பு இல்லை.

THIRU. K. VINAYAKAM : Whereas it has not been possible for the Government to construct houses for elementary school as well as college teachers, will the Government consider the possibility of giving at least house rent to elementary school teachers and college lecturers working in cities and towns?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : வீட்டு வாடகைப்படி என்று கொடுக்கும் நிலைமை ஏற்படுமானால் அந்த வகையில் ஏராளமாகச் செலவாகும் நிலைமை ஏற்படுகிறது. கொள்கையளவில் ஒப்புக்கொண்டால் படிப்படியாக நிதிவசதி ஏற்படும் போது செய்யலாம்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: கிராமங்களில் இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு வீடு இல்லாமல் நாலைந்து மைல் நடந்து போக வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட நிலைமையைத் தவிர்க்க ஆசிரியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை மேற்கொள்ள முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தற்போது ஆசிரியைகளின் நிலைதான் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதுவும் பஞ்சாயத்து ஒன்றுக்கு இரண்டு வீடுகள் வீதம்தான் கட்ட திட்டமிடப்பட்டிருக்கிறது. அது போதுமா என்றால் போதாது. பள்ளிக்கூடக் கட்டடங்கள் கட்டுவதற்கே நிதிவசதி இல்லாத நிலைமையில் இப்போது ஆசிரியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் கவனிக்கப்படுகிற நிலைமையில் இல்லை.

திரு. கே. சகாதேவ கண்டர்: மலைப்பாங்கான பகுதிகளில் உள்ள கிராமங்களில் ஆசிரியர்களுக்கு வீடு இல்லாத காரணத்தால் எந்த ஆசிரியரும் அந்தப் பகுதிகளுக்குப் போவதில்லை. அதனால்

சில பாடசாலைகள் மூடப்படக்கூடிய நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கோ வீட்டு அலவன்ஸ் கொடுப்பதற்கோ அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : வீட்டு அலவன்ஸ் கொடுப்பது என்றால் எல்லா ஆசிரியர்களுக்கும் கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆசிரியர்களின் பணி முக்கியமான பணி என்று கருதி ஆங்காங்கு இருக்கிறவர்கள் அவர்களுக்கு வீடு தேடித் தரும் முயற்சியில் ஈடுபட்டால்தான் இந்தப் பிரச்சினை தீரும்.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : ஆரம்ப ஆசிரியர்களுக்கும், அரசாங்கப் பள்ளிகள், நகரவைப் பள்ளிகள் ஆசிரியர்களுக்கும் வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுப்பது, வீடு கட்டிக் கொடுப்பது போல் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் வீடு கட்டிக் கொடுத்தல், வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுத்தல் போன்றவற்றுக்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் தற்போதைக்கு இல்லை. வீட்டு வாடகை அலவன்ஸ் பற்றி பரிசிலனையில் இருக்கிறது.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : கிராமப் பிரதேசங்களில் ஆசிரியர்களுக்கு வீடு கிடைப்பதற்கு கஷ்டமாகயிருப்பதால் குறிப்பாக பின்தங்கிய கிராமங்களில் அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஏதாவது ஆலோசனைகள் கூறப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரம் இல்லை.

திரு. அ. ஆறுமுகம் : கிராமப் பகுதிகளில் உள்ள ஆரம்ப ஆசிரியர்களுக்கு, அரிசன ஆசிரியர்களுக்கு கிராமங்களில் வீடுகள் கிடைப்பதில்லை. ஆகவே, அரிசன ஆசிரியர்களுக்கு தனியாக இடம் ஒதுக்கித் தரும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது அந்த யோசனை இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, even though there is no proposal to construct houses for male teachers, I understand that there is a Fund called 'Teachers Benevolent Fund' and so will the Hon. Minister for Education be pleased to state whether loans will be granted from that Fund to the teachers to construct houses?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட திட்டம் எதுவும் இப்போது இல்லை.

திரு. ரா. ரா. முனுசாமி : பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களை ஆண்டுக்கு ஒரு தரம் டிரான்ஸ்பர் செய்கிறார்கள், கால வரம்பின்றி. யூனியன் சேர்மனுக்கு

1967 ஜூன் 24]

வேண்டியவர்களாக இருந்தால் அவரவர்கள் ஊரில் போடுகிறார்கள். இல்லா விட்டால் எட்டு பத்து மைல்கள் தள்ளியுள்ள ஊர்களில் போட்டு அவர்களை பழி வாங்குகிறார்கள். ஆகவே யூனியன் ஆசிரியர்களுக்குள்ள அந்த காலவரம்பு நீடிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : எவ்வளவு வீட்டு வாடகை கொடுத்தாலும் மலைகளின் மீதும், மலையடிவாரங்களிலும், ரோடுகள் இல்லாத பிரதேசங்களிலும் உள்ள பாடசாலைகளுக்கு போய் வேலை செய்ய ஆசிரியர்கள் தயங்குகிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆகவே, மலைகளில் அல்லது மலையடிவாரங்களில் உள்ள பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யப் படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அது கவனத்தில் கொள்ளப்படும். நான்காவது திட்டத்தைப் பொறுத்தவரையில் வீடுகள் கட்டித் தருகிற திட்டத்தில் 1,875 வீடுகள் கட்டிக் கொடுக்க நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்டமிடப்பட்டிருக்கிறது. அதற்கு 2 கோடி 17 லட்சம் ரூபாய் செலவாகும் நிலை இருக்கிறது. அப்படி எடுத்துக் கொண்டாலும் ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு ஐந்து வீடுகள்தான் வரமுடியும். நான்காவது திட்டத்தில் ஆசிரியர்களுக்கு அந்த வீடும் 5,800 ரூபாயில் முடிய வேண்டுமென்ற அடிப்படையில்தான்.

திரு. சோ. அழகர்சாமி : முனிசிபல் நகரங்களில் குடியிருக்கும் ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப் படி கொடுக்கும் உத்தேச முண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன்.

திரு. ஏ. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : ஏற்கனவே வீடு உள்ள ஆசிரியர்கள் அந்த ஊரில் இருக்கும்போது பல்வேறுபட்ட காரணங்களுக்காக அந்த ஊரை விட்டு மாற்றி இருக்கிற வீட்டையும் இல்லாமல் செய்யும் நிலையை அகற்றி ஒழுங்குபடுத்த அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கவனத்தில் கொள்ளப்படும்.

THIRU T. MARTIN : Sir, may I request the Hon. Minister to state whether any directive has been given to the State Housing Board regarding the future allotment of houses, giving preference to college lecturers and professors?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல்

* 55 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா---

(அ) ஓய்வு பெறும் உபாத்தியாயர்களுக்கு இப்போது கொடுக்கப்படுகிற பென்ஷன் எந்த ஆண்டு முதல் கொடுக்கப்படுகிறது ?

(இ) அதற்கு முன்னால் ஓய்வு பெற்ற உபாத்தியாயர்களுக்கும் பென்ஷன் கொடுக்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) 1---4---1955 முதல் கொடுக்கப்படுகிறது.

(இ) இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : 1955-ம் ஆண்டு முதல் ஓய்வு பெறக் கூடிய எல்லா ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்படுகிறதா ? அல்லது குறிப்பிட்ட ஆசிரியர்களுக்கு மட்டுமா ? பஞ்சாயத்து போர்ட், தனிப்பட்ட மானேஜ்மெண்ட், கவர்ன்மெண்ட் ஸ்கூல்கள் என்றெல்லாம் இருக்கிறதே, எல்லோருக்கும் கொடுக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அரசாங்கத்தில் பணியாற்றியவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

THIRU R. PONNAPPA NADAR : Sir, will the Government be pleased to grant pension to the surrendered school teachers of the erstwhile Travancore-Cochin State?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி வேண்டும்.

திரு. பெ. மலைச்சாமி: உதவிப் பணம் (Pension) வாங்குகிற ஆசிரியர்கள் குறிப்பிட்ட நகரத்திற்குச் சென்று வாங்க வேண்டிய நிலையைத் தளர்த்தி அந்த ஆசிரியர்கள் குடியிருக்கின்ற ஊர்களுக்கே பண விடைத்தாள் (M.O.) மூலம் அனுப்ப அரசாங்கம் முயலுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மூலக்கேள்விக்கு இது தொடர்புடையதில்லை என்றாலும், அது கவனிக்கப்படும்.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : இப்போது ஆசிரியர்களுக்கு ஓய்வுப் பணம் எவ்வளவு தரப்படுகிறது ? அது போதவில்லை, அதைக் கூட்ட வேண்டுமென்று அவர்கள் சார்பாக ஏதாவது மகஜர்கள் வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: எவ்வளவு பணம் கொடுக்கப்படுகிறது என்பதற்கு தனிக்கேள்வி வேண்டும்.